**த. நா.ச.பே. எண் : 010** **நாள் : 31.03.2015**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (31.3.2015) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றுள்ள புதிய திட்டங்கள் குறித்து ஆற்றிய உரை:-

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார் அவர்கள் எந்த ஒரு புதிய திட்டமும் இந்த அறிவிப்பில் இல்லை என்ற அந்த செய்தியை அவருடைய தலைவர் வெளியில் இருந்து சொன்னதை இவர் இப்பொழுது உள்ளே இருந்து சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று எண்ணுகின்றேன். பொறுமையாக மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வேண்டும்.

இடதுசாரி தீவிரவாதம் ஊடுருவ வாய்ப்புள்ள பகுதிகள் உள்ளிட்ட மலைப் பகுதிகளுக்கு சிறப்புக் கவனம் அளிக்க 75 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் ஒரு சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு புதிய திட்டம்.

திருநெல்வேலி, திருச்சியில் வாழைக்கும், கிருஷ்ணகிரி, தேனியில் மாம்பழத்திற்கும், தருமபுரி, கிருஷ்ணகிரியில் தக்காளிக்கும், திண்டுக்கல், திருச்சியில் வெங்காயத்திற்கும், இராமநாதபுரம், தூத்துக்குடியில் மிளகாய்க்கும் ஒருங்கிணைந்த உற்பத்தி மற்றும் குளிர்சாதன சேமிப்பு கட்டமைப்புகள் கட்டப்படும் என்ற அறிவிப்பு புதிய திட்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், கவனிக்க வேண்டும். 25 கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்துதல், 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெண்ணாறு உப வடிநிலப் பகுதியில் காவேரி வடிநில பருவநிலை மாற்ற திட்டம் புதிய திட்டம், மாதவரம், அம்பத்தூர், கொரட்டூர் ஏரிகள் சீரமைப்பு புதிய திட்டம், 2,414 கோடி ரூபாயில் உலக வங்கி திட்டத்தில் 427 கி.மீ. இரு வழிச் சாலையாக மாற்றுவது உள்பட 10 ஆயிரம் கி.மீ. சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் புதிய திட்டங்கள். தொழில்முனைவோருக்கு ஒற்றைசாளர முறை முதலீட்டாளர் இணையதளம் ஏற்படுத்துவது புதிய திட்டம், 2,000 ஊராட்சிகளில் மாதிரி தூய்மை கிராமம் திட்டம் மற்றும் 15 இலட்சம் கழிப்பறைகள் கட்டும் திட்டம் புதிய திட்டம், திறன்மிகு நகரங்கள் திட்டத்திற்கு 400 கோடி ரூபாய், நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கு 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு, அதுவும் புதிய திட்டம். தமிழ்நாடு நிலைக்கத்தக்க நகர்ப்புற கட்டமைப்புத் திட்டத்தின் மூலம் சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியில் 1,101.43 கோடி ரூபாய் செலவில் பெரும் மழை நீர் வடிகால் திட்டம் புதிய திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் குதிரைவாய்மொழியிலும், தூத்துக்குடி மாவட்டம் ஆலந்தலையிலும் 1,947 கோடி ரூபாயில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் புதிய திட்டம்,

தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்த மாவட்டம்தோறும் நோய் கண்டறியும் வசதிகளை மேம்படுத்தும் திட்டம் புதிய திட்டம், தமிழகத்தில் 12,609 அங்கன்வாடி மையங்களுக்கும் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம் புதிய திட்டம் போன்ற புதிய திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. கண்ணை மூடிக்கொண்டு புதிய திட்டங்களே இல்லை என்று சொன்னால் எவ்வாறு நாம் நம்ப முடியாதோ, அதுபோலதான் திரு. கணேஷ்குமார் அவர்கள் தனது வாதத்தினை இங்கே வைத்துள்ளார்கள். மருத்துவர் ராமதாஸ், விவசாயம், தொழில்நுட்பம், மின்வெட்டு, வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு போன்றவற்றிற்கு தீர்வு இல்லை என்று தெரிவித்துள்ளார். வறுமை ஒழிப்புத் திட்டத்திற்காக, நகர்ப்புறத்திற்கு 357 கோடி ரூபாய், கிராமப்புறத்திற்கு 505.40 கோடி ரூபாய் என ஆக மொத்தம் 862.40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வேலைவாய்ப்பை ஊக்குவிக்க ஒதுக்கீடு 100 கோடி ரூபாயிலிருந்து 150 கோடி ரூபாயாக உயர்வு, 2 இலட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி போன்ற நடவடிக்கைகள் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான திட்டங்கள். இவையெல்லாம் வறுமை ஒழிப்பிற்கும், வேலைவாய்ப்பை உருவாக்குவதற்குமான திட்டங்களாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார் அவர்களுக்குத் தெரியில்லையா? விவசாயத்திற்கு கூடுதல் ஒதுக்கீடு, தொழில் உற்பத்திக்கு வரிச் சலுகைகள், ஒற்றைச்சாளர இணையதளம் மற்றும் பல சலுகைகள் நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. இவை, துறைகளின் வளர்ச்சிக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள். பூனை தன் கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிடாது. நல்ல திட்டங்கள் எதுவும் இவருக்கு தெரியப்போவது இல்லை. அவற்றைப் பாராட்டும் மன நிலையும் அவருடைய தலைவருக்கு தற்காலிகமாக இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**